பதிவு எண்— M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

OFFICE ... 14 APR 1956

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனுர்.

கிளை—8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: மாசி, உசு 9—3—56 தளிர்—20

345
2-56

திருக்குறள் பிழிவு:

## சில படி-முறைகள்

பொருள், கல்வி, அருள் என்பவை வாழ்க்கையில் இன்றியமையாதவை; ஆனல் இவை மூன்றும் ஒரே தரமானவையல்ல. பொருளைவிடக் கல்வியும், கல்வியைவிட அருளும் மேம்பாடானவை.

பொருட் செல்வம் பூரியார்கண்ணும் உள; கல்வி கேடில் விழுச்செல்வம்; அருள், செல்வத்துள் செல்வம்! இப்படி திருவள்ளுவர் தரம் பிரித்துப் பேசுகின்ருர்.

இதிலிருந்து, நடந்துகொள்ளவேண்டிய முறைகளை நாம் தெளிந்துகொள்ளலாம். உயர்ந்தது அருட் செல்வம் என்று தெரிவதனல் அதனை மக்கள் முக்கியமாக அடையவேண்டும் என்றும், அதற்காகவே மற்ற இரண்டையும் படிகளாக அடைய வேண்டியிருக்கிறதென்றும், அந்தப் படிகளை அடையும்போது அருள் என்னும் பெரிய துறையில் ஏறுதலே நோக்கமாக இருக்கவேண்டும் என்றும், இடையிலே தங்கிவிடக் கூடாது என்றும் அறியலாம். அப்படியே கல்வியை அடையப் பொருளையும் படியாகக் கொள்ள வேண்டும்.

இவ்வகையில், மற்ருேர் அரிய உண்மையை மக்கள் மிக முக்கியமாகத் தெளியவேண்டி யிருக்கிறது. அதாவது, அருள் முக்கியம் என்னும்போது, அதற்காகக் கல்வி பொருள் என்பவற்றைச் செலவு செய்யலாமேயல்லது கல்வி பொருள் என்பவற்றின் இன்பத்திற்காக அருளை இழந்துவிடவோ மறந்துவிடவோ முடியாது என்பது; அப்படியே பொருள் நிலைக்காகக் கல்வியையும் இழந்துவிட முடியாது.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.


| கிளை | மன்மத, | தளிர் |
|---|---|---|
| 8 | 9-3-56 | 20 |


# தஞ்சை மாவட்டத்தின் கலைக் கோயில்கள்

(முன் தொடர்ச்சி)

இந்த மூர்த்தி இருக்கும் சாய்க்காட்டை விட்டுப் புறப்பட்டு, அன்று மாதவி வாழ்ந்தாளே அந்தத் திருக்கடையூர்வந்துசேருங்கள். திருக்கடையூரிலே தேரோடும் வீதியைக் கடந்து கோயிலுக்குள்ளே சென்றால் அங்குக் காலசம்ஹார மூர்த்தியைக் காணலாம். மார்க்கண்டனுக்காகக் காலனை எட்டி உதைத்த மூர்த்தியின் திருவுருவம், நாலடி உயரத்தில் அழகாக உருவாகி இருக்கிறது. ஓங்கி மிதிக்கத் தூக்கிய காலும் காலன் உடல் அலகையில் ஏந்திய சூலமும், கண்டு தரிசித்து அதே காலன் நம்மை அணுகாமல் இருக்க, அவன் காலில் விழுந்து வழிபட்டுத் திரும்புங்கள்.

திருக்கடையூரிலிருந்து தரங்கம்பாடி, தில்லையாடி எல்லாம் கடந்து காரைக்காலுக்குப்போகலாம், வழியில் திருநள்ளாறு என்ற தலத்தையும் தரிசிக்கலாம், பிறகு மாயூரம் திரும்பி அங்கிருந்து திருவாரூரை நோக்கிப் புறப்பட வேண்டியதுதான்.

மாயூரத்திற்குத் தெற்கே நாலுமைல் சென்றதும் வழுவூர் செல்லும் வழி குறுக்கிடும். அதுவும் ஒரு அட்ட வீரட்டத்தலம். ஆதலால் அங்கும் போகலாம். இந்தக் கோயிலில் மூன்று மூர்த்திகள் செம்பிலே உருவாகி இருக்கிறார்கள். அடடா அந்த கஜசம்ஹார மூர்த்தி இருக்கின்றாரே அவருடைய திருவுருவம்தான் எத்தனை அழகு. யானையின் உடலுட் பாய்ந்து கிழித்துக் கொண்டு அப்படியே ஒரு திருகல் திருகிக்கொண்டு வருகிறாரே, அவரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சி ஒதுங்க வேண்டியதுதான். நாமென்ன? அன்னை பார்வதியே அஞ்சி ஒதுங்கி மிரளுகிறாளே. ஆனால் அவள் கையில் உள்ள குழந்தை முருகன் மட்டும் அஞ்சாமல் 'அதோ அப்பா வெற்றியோடு வருகிறாரே பார் அம்மா' என்று அம்மாவையே திருப்புகிறானே அவரைநோக்கி. இத்தனையும் காணலாம் அந்த அழகான மூர்த்தத்திலே, இதோடு தாருகா வனத்து ரிஷி பத்தினிகளின் கர்வத்தைக் குலைக்கத் தோன்றிய பிட்சாடனரும், இருடிகளின் ஆணவத்தையே அடக்கிய அந்த மோகினியும் அதி அற்புத அழகோடு அங்கே உருவாகியிருக்கிறார்கள். இந்த மூன்று மூர்த்திகளையும் விட்டுப் பிரியவே மனம் வராது இருந்தாலும் என்ன செய்ய, பிரிய வேண்டியதுதான்.

வழுவூரைவிட்டுத்திருவாரூர் வழியில் முடிகொண்டான் ராமர், இலக்குமணர், சீதை, அடம்பர், ராமர் எல்லோரையும் தரிசிக்கலாம். அதற்கெல்லாம் நல்ல அவகாசம் வேண்டும். அவ்வளவு அவகாசம் இல்லாதவர்களே நேரே நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே திரும்பி அப்பர் முத்தியடைந்த திருப்புகலூரையும். திருமருகலையும் கடந்து கொஞ்சம் மேற்கே போனால் சிறுத்தொண்டர் பிறந்து வளர்ந்து வாதாபி கணபதியைப் பிரதிட்டை செய்த திருச்செங்காட்டங்குடிக்கு வந்து சேரலாம். இந்தச் சின்ன

# நெய்வேலிக் கரிக் கனி

[கே. பி.]

அணைகளும், ஆலைகளும் தேக்கங்களும், தொழிற்சாலைகளும் வட நாட்டில்தானா? பனை வெல்லம் காய்ச்சுதலும், கூடை முடைதலும் தானா தென்னாட்டில்? என்று கொதிப்படைந்துள்ள தமிழ்ப் பெருமக்களுக்கு நெய்வேலியின் நினைப்பு ஆறுதல் அளிக்கும்.

தாயோதர், ஹிராகுத் பாகரா, நங்கல், சந்திரி ஆகியவை வடநாட்டை வளப்படுத்தியுள்ள மாதிரி தென் நாட்டைப் பொன்னாடாக்கத் திறவுகோலாக விளங்குகிறது நெய்வேலி. அங்கு 100 சதுரமைல் பரப்பில் பூமிதேவியின் கர்ப்பத்தில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரிபுதையுண்டிருக்கிறது. ஆனால் அதை வெளியே எடுப்பது ஒரு பெரிய ஏற்பாடு.

## தென்னாட்டின் 'ரூர்'

யந்திரத் தொழில் உலகில் மன்னனாக விளங்கும் நாடு 'ஜெர்மெனி' என்பது, எல்லாருக்கும் தெரியும். காரணம் என்ன? அங்குள்ள 'ரூர்' பள்ளத்தாக்கில் ஏராளமான நிலக்கரி கிடைக்கிறது. அதைக் கொண்டு இரும்புக் கனிகள் பயன் படுத்தப்பட்டு, சிறந்த புதிய யந்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன. தென் இந்தியாவில் சேலம் வட்டத்தில் இரும்புக் கனிப் பொருள்கள் உள்ளன. ஆனால் அண்மையில் நிலக்கரி கிடைக்காத காரணத்தால் அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. பீகாரிலிருந்து நிலக்கரி வரவழைத்து இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தினால் கட்டுபடியாகாது. நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை நிறுவுவது இயலும். பழுப்பு நிலக்கரியைக் கொண்டு இரும்பை உருக்கும் 'கோக்' தயாரிக்கப் புதுவகையான குறைந்த சூட்டு உலை ஒன்றை 'ஜெர்மனியர்' தயாரித்துள்ளது, நமக்குப் புதிய நம்பிக்கையை அளிக்கிறது. பழுப்பு நிலக்கரி பரிசீலனை வெற்றிகரமாக முடிந்தால் நெய்வேலியைத் தென் இந்தியாவின் 'ரூர் பிரதேசம்' என்று அழைத்தால் அது மிகையாகாது.

## பழுப்பு நிலக்கரி என்றால் என்ன?

பழுப்பு நிலக்கரி என்றால் என்ன என்பது இன்னும் பலருக்குத் தெரிந்திராது. கட்டை, நிலக்கரி முதலியவற்றை எரிபொருளாகப் பயன்படுத்தி நமக்குப் பழக்கமிருக்கிறது. கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு காடுகளில் புதையுண்ட கட்டைகளின் வேறு உருவந்தான் நிலக்கரி! கட்டையானது அழுகி மண்ணின் அழுத்தத்தால் ஈரத்தால், அது நல்ல நிலக்கரியாகிறது. அழுத்தம் மேலும் அதிகரித்தால், அது நல்ல நிலக்கரிகளாக முற்றுகிறது. நன்கு முதிர்ச்சியடையாத நிலக்கரியையே 'லிக்னைட்' அல்லது பழுப்பு நிலக்கரி என்கிறோம். அது கைக்கு மெதுவானது. எளிதில் உதிர்ந்துவிடும்.

## பயன்

பழுப்பு நிலக்கரியின் உபயோகங்கள் அநேகம். அவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

அதைப் பக்குவப் படுத்தாமலேயே எரி பொருளாக உபயோகிக்கலாம். ஈரம் அதிகமாகையால் கனம் அதிகமிருக்கும். ஆகவே போக்குவரத்து செய்வதற்கு அதிக செலவாகும். அச்செலவைக் குறைப்பதற்காக அதைப் பக்குவப்படுத்திக் கரி சத்து சேர்த்துக் கெட்டியாக்கலாம். பக்குவப்படுத்தும்போது வெளியாகும் வாயுக்களுடன் 'ஜிப்சப்' அல்லது கந்தகம் சேர்த்து ரசாயன உரம் (அமோனியம் சல்பேட்) தயாரிக்கலாம். பழுப்பு நிலக்கரியிலிருந்து 'டீசல் எண்ணெய், பெட்ரோல்' முதலிய பொருள்களும் உற்பத்தி செய்யலாம்.

தொழில் வளர்ச்சியில் தென் இந்தியா பின் தங்கியிருப்பதற்குக் காரணம், போதிய அளவு மின்சார வசதியின்மையே. பைக்காரா, மேட்டூர், பாபநாசம் தேக்கங்களிலிருந்து உற்பத்தியாகும் மின்சார விசை — மூலமாகத்தான் தமிழகத்தில் சிறிதளவாவது தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இப்போது கட்டப்பட்டு வரும் பெரியாறு முதலிய தேக்கங்களிலிருந்து விசை உற்பத்தி செய்தாலுங்கூடத் தமிழகத்தில் பிரமாதமான தொழில் வளர்ச்சி ஏற்பட்டு விடமுடியாது. ஆகவே மின்சார சக்தியைப் பூரணமாக உற்பத்தி செய்யும் பொற்காலம் ஏற்படும்போதுதான் தமிழகத்தில் தொழில்வளம் ஏற்படும். 'தெர்மல் மின்சார நிலையங்கள், ஏற்பட்டால்தான் சிக்கல் தீரும். அதற்கு நிலக்கரி கட்டாயம். மேலும் பருவ மாறுதல்களால் மின்சார உற்பத்தி மாறுபடக்கூடியது, ஆகவே நெய்வேலிப்

பழுப்பு நிலக்கரி மிகவும் பயன் படக்கூடிய அருந்தனம். அதைக் கொண்டு பிரம்மாண்டமான தெர்மல் மின்சார நிலையம் ஏற் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பழுப்பு நிலக்கரியைக் கொண்டு நீராவி உண்டு பண்ணி ஏராள மான மின்சார சக்தியை உற் பத்தி செய்தால் தமிழ் நாடு, மட்டுமல்ல, ஆந்திரா, மைசூர் திருவாங்கூர் கொச்சி ராஜ்யங் கள் உள்ளிட்ட தென் இந்தியா பூராவுக்கும் மின்சார விசை சப்ளை செய்ய முடியும். தமிழ்நாட் டின் தனிச் சொத்தாக அதை வைத்துக் கொள்ளப் போவ தில்லை. 'யான் வாழ்ந்து, வைய கம் வாழ்க' என்னும் பரந்தமனப் பான்மைபடைத்தவனல்லவாதமி ழன்? மேற்கு மலைத் தொடரில் உள்ள நதிகளின் தண்ணீர் கட லில் விழுந்து வீணானாலும் சரி, தமிழருக்குக் கொடோம் என்று சொன்ன கேரளத்தாருக்கும் நெய்வேலி மின்சாரம் நன்கு பயன்படும். குறுகிய பிரதேச நோக்கு தமிழருக்கில்லை; யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதே தமிழரின் கொள்கை அல்லவா?

## நெய்வேலி யாத்திரை

இத்தகைய பெருமை வாய்ந்த நெய்வேலி இடத்தை நேரில் காணும் வாய்ப்பு சமீபத்தில் சென்னைப் பத்திரிகையாளர் களுக்குக் கிடைத்தது. சுமார் 40 பத்திரிகையாளர்கள் சென் றோம்; நிலக்கரிப் படிவங்களை வெட்டி எடுப்பதற்குப் பூர்வாங் கமான பரிசோதனையின் இறு திக் கட்டம் தொடங்கியுள்ளது. பிரமாண்டமான பம்புகளைக் கொண்டு பழுப்பு நிலக்கரிப் படிவத்துக்கடியில் உள்ள தண் ணீரை வெளியே இறைக்கும் இடரானவேலை தொடங்கியதை நேரில் கண்டோம். அங்கு நடக் கும் பெரு முயற்சிகளின் அபி விருத்தியைக்கண்டபிறகுஇனித் தென் நாட்டின் தொழில் அபி விருத்தி மகோன்னதமாயிருக் கும் என்ற நம்பிக்கை ஏற்பட் டது.

## நீருடன் போர்

நெய்வேலிச் சுரங்கப் பரிசீ லனை பிரதம நிர்வாக அதிகாரி ஸ்ரீ டி. எம். எஸ். மணியும் சென்னை இந்திய அரசாங்க தகவல் இலாகா உதவி அதிகாரி ஸ்ரீ ராகவனும், பத்திரிகையா ளர்கள் பிரயாணத்துக்கும், நெய்வேலியில் தங்குவதற்கும் சகல வசதிகளும் செய்து கொடுத்தனர்.

சுரங்க பரிசீலனை பிரதேசத் தில் ஸ்ரீ எம். எஸ். மணியும், ஜெனரல் சூப்பரின்டென் டெண்டு ஸ்ரீ ஏ ஸ்ரீநிவாஸனும் பலவேறு இடங்களுக்கு எங் களை அழைத்துச் சென்று விஷயங்களை விளக்கினர். விவ சாய மந்திரி ஸ்ரீ எம். பக்தவச் சலம் விஜயம் செய்திருந்தார்.

அந்த வட்டாரத்தில் நுழைந்ததும், நாங்கள் கண் டது அங்கு அணிவகுத்து நின்ற துளை போடும் யந்திரங்கள் தான். அவற்றின் பெயர் விநோ தமாயுள்ளது. 'பெளலிங் டிரில்ஸ்' என்பது. அதுதோற்று விடும்டிரில்கள்என்பதுபொருள் ஆனால் உண்மையில் அவை தோல்வி என்பதையே அறியா தவை. பூமியில் நிலக்கரிக்குக் கீழுள்ள நீரை அடைய 400 அடி ஆழம்குடைவது என்றால் எளிய காரியமா? அதுவும் இம்மியளவு கூட இப்புறம், அப்புறம் சாயா மல், நேர்செங்குத்தாகத் துளைப் பது என்றால் எவ்வளவு சிரமம்! நெய்வேலிப்பூமியில் பல்வேறு படிவங்கள் உள்ளன. மேலாக மண், அதற்குக்கீழ் மஞ்சள் களிமண், பிறகு களி கலந்த மணல், அதன் கீழ் கடினமான கல்; பிறகு கடலூறல் கூழாங் கல் படிவம்; அதற்குக் கீழாகத் தான் பழுப்பு நிலக்கரிப் படி வம் உள்ளது. அதன் கனம் 69 அடி வரை உள்ளது. அதன் கீழ் ஏராளமான தண்ணீர் உள் ளது. பழுப்பு நிலக்கரிப்படிவத் தின் கனமும், அதன் மேல் உள்ள மண் கல் ஆகியவற்றின் கனமும் தண்ணீரை அழுத்து கின்றன. கீழேயுள்ள தண்ணீ ரானது பழுப்பு நிலக்கரிப்படி வத்தை மேல்நோக்கி அழுத்து கிறது என்றும் சொல்லலாம். இந்தத் தண்ணீர் அழுத்தம் சதுர அடிக்கு 6 அல்லது 8 டன் கனம் என்று கணக்கிடப்பட் டிருக்கிறது அடியில் தண்ணீர் இருந்தால் என்ன, பழுப்பு நிலக்கரியின் மேல் தண்ணீர் இல்லையே. பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதில் என்ன சிரமம்? என்று சாதாரண மனிதன் கேட்கலாம். அப்படி நிலக்கரி யை வெட்டி எடுப்பது கடின மில்லை. செய்தால் ஆபத்து தண்ணீரை சமாளிக்காமல் நிலக்கரிப் படிவத்தை வெட்டி னால், கீழேயுள்ள தண்ணீரின் அழுக்கத்தால்படிவம் வெடித்து ஒரே நொடியில் சுரங் கம் பூராவிலும் தண்ணீர் புகுந்து விடும். வேலை செய்ப வர்களின் உயிருக்கு ஆபத் தேற்படும். யந்திரங்களின் உருக் குலைந்து நாசமடையும். ஆகை யால்தான் தண்ணீரை வெளி யே இறைத்து நீர் மட்டத்தைக் குறைத்த பிறகுதான் நிலக்கரி யை வெட்டமுடியும்

## நாட்டுக் கருவிகள்

தண்ணீரை இறைக்க,குழாய் களை இறக்குவதற்காகத் துளை போடும் இயந்திரங்கள் வெளி நாடுகளிலிருந்து வந்து சேரு வதற்குத் தாமதமானபடியால் சில யந்திரங்களை நெய்வேலியி லேயே தயாரித்தனர். அந்தக் கருவிகளையும் பார்த்தோம். வெளி நாட்டிலிருந்து வந்துள்ள யந்திரம் ஒவ்வொன்றின் விலை சுமார் அரைக்கோடி ரூபாய்.

காலை 9–30 மணியானதும் தண்ணீர் இறைப்பு வேலையை விவசாயமந்திரி ஸ்ரீ. எம். பக்தவச்சலம் முடுக்கி விட்டார். 'சைரன்' என்று ஆங்கிலத்தில் கூறப்படும் மின்சாரக் குழல் கருவியின் பித்தானை மந்திரி அழுத்தியதும் அக்கருவி காது செவிடுபடும்படி ஒலித்தது. தமிழ் நாட்டின் எதிர்காலத் தொழில் வளத்தை முன்னறிவிக்கும் சங்க நாதமாகவே அது எனக்குப்பட்டது. செந்தமிழ்நாட்டில் செல்வம் கொழிக்கப் போகிறது என்று நினைப்பூட்டிக் காதில் இன்பத் தேன் மாதிரி பாய்ந்தது அந்த ஒலி. சங்கு ஊதியதுதான் தாமதம். 16 ஊதியதுதான் தாமதம். 16பிரமாண்டமான பம்புகளிலிருந்தும் தண்ணீர் பேரிரைச்சலுடன் குபு குபு என்று வெளியே பாய்ந்தோடியது. தமிழ் நாட்டில் தேனும் பாலும் பெருக்கெடுத்தோடும் எதிர்காலக் காட்சி என் மனக்கண் முன் கூத்தாடியது. நிமிடத்துக்கு 16000 காலன் வீதம் தண்ணீரை வெளியே கொணர்ந்து கொட்டிய காட்சியைப் பார்த்து அங்குக் கூடியிருந்த தொழிலாளிகளும் சிறுவர்களும் களிக்கூத்தாடி ஆரவாரித்த காட்சி என் மனதை விட்டு அகலவில்லை. இவ்வளவு பிரம்மாண்டமான பம்புகள் இதுவரை இந்தியாவில் எங்குமே உபயோகிக்கப் பட்டதில்லை.

நிலக்கரிக்குக் கீழுள்ள நீர் பூராவையும் வெளியேற்றுவதா? அது சாத்யமா? கடலை இறைப்பது மாதிரியல்லவா இருக்கிறது என்று கேட்கலாம். உண்மை; அது சாத்திய மில்லை தான். அது அவசியமுமில்லை என்பதுதான் கவனிக்க வேண்டிய கருத்து- நிலக்கரிப் படிவத்தை அழுத்திக்கொண்டிருக்கும் நீர் மட்டத்தை 50 அடி குறைத்து விட்டால் போதும். பிறகு கரியைப் பத்திரமாக வெட்டியெடுக்கலாம். நிமிஷத்துக்கு 20 000 காலன் வீதம் இடைவிடாமல் 100 நாட்கள் இறைத்தால் நீர் மட்டம் குறைந்துவிடும். இதற்குத்தான் இப்போது தண்ணீர் இறைக்கப்படுகிறது.

இந்தக் குழாய்கள் பூமிக்கடியில் 400 அடி ஆழம் செல்கின்றன. இவை தண்ணீரை இறைக்க இறைக்கப் பூமியில் நீர்மட்டம் குறைகிறது. அது எவ்வளவு குறைகிறது என்பதைக் கவனிக்க அருகில் அதே ஆழமுள்ள 21 சிறு குறுக்களவுள்ள துவாரங்கள் தோண்டப்பட்டு நீர்மட்டம் தானாக இயங்கும் கருவிகள் மூலமாகக் கணக்கிடப் படுகிறது. சுற்று வட்டார நீர்மட்டம் குறைவதைக் கணக்கிடுவதற்காக 7 மைல்கள் தூரம் வரையிலும் ஆங்காங்கே இத்தகைய துவாரங்கள் போடப்பட்டு நீர்மட்டம் கண்காணிக்கப்படுகிறது.

## பம்புகள் பத்திரம்

இவ்வளவையும் செய்வதென்பது எளிதன்று; இரவு பகலாக, அதிகாரிகளும், நிபுணர்களும், எஞ்ஜினீயர்களும், பாட்டாளிகளுமாக பல மாதங்களாக சிரமப்பட்டு வருகின்றனர். பம்பு கோளாறடைந்து, தண்ணீர் இறைப்பு 5 நிமிட நேரம் தடைப்பட்டால் தண்ணீர் மட்டம் திடீரென்று உயர்ந்துவிடும் எவ்வளவோ வருத்தப்பட்டுப் பம்புகளை இறக்கியுள்ளனர். சுரங்கப் பிரதேசத்தில் பாம்புகள் அதிகம். பாம்பையும் மதியாது பம்பு இறைப்பது பாராட்டத் தக்கதல்லவா? பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்கள். ஆனால் இந்தப் பாட்டாளிகள் பாம்பைக் கண்டு பயப்படாது பாடுபடுகிறார்கள். 'இரவு ஷிப்டு டிரில்லர்களே கண்களை நன்றாக விழித்துப் பாருங்கள். பாம்புகள் அதிகம்' என்ற போர்டை யாரும் பார்க்கத் தவறமுடியாது. பரீட்சார்த்தக் கட்டமாதலால் எல்லாச் சோதனைகளையும் மிகச் சிக்கனமாகவே நடத்துவது போற்றத் தக்கது. 71 லட்சம் ரூபாய்தான் இதுவரை செலவாயிருக்கிறது என்றால் ஆச்சர்யமாகத்தானிருக்கிறது. இந்திய அரசாங்க எஞ்ஜினியர்கள் ஜான் ஹேவர், ஸி. அர் ராமகிருஷ்ணா, எச்.ஸி. ஷேகல் ஆகியவர்களும் பவல்டய்ரின் கம்பெனி எஞ்ஜினீயர்களும் செய்யும் சேவைக்குத் தமிழர்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். எத்தனையோ யந்திரங்களிருந்தாலும் அவற்றை இயக்கும் மனித யந்திரங்களை ஊக்குவித்து, தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் பெரிய யந்திரங்கள் பிரதம நிர்வாக அதிகாரி ஸ்ரீ டி. எம். எஸ். மணியும் அவருக்கடுத்தபடியாக ஜெனரல் சூப்பரின்டென்டு ஸ்ரீ ஏ. சீனிவாசனும் என்பது குறிப்பிடத் தக்கது. அனுபவமும் திறமையும் வாய்ந்த ஸ்ரீ மணிக்குத் திட்டம் பற்றிய எல்லாத் தகவல்களும் தலைகீழ்ப் பாடம். ஸ்ரீ ஏ. ஸ்ரீநிவாசன், கீழ்பவானி அணைத் திட்டத்தை நிறைவேற்றிப் பெயர் பெற்ற பிரபல எஞ்ஜினீயர். திட்டத்தைநிறைவேற்றும் திறமை குறித்துப் புகழ்ச்சியை ஸ்ரீ மணி எதிர்பாராதது, திட்டம் நிறைவேற்[illegible]சப் பாதையின் மந்திரக் கதவு திறக்க வேண்டுமென்றே ஆவலாயுள்ளார் என்பது அவரது பேச்சில் தொனித்தது.

தண்ணீர் இறைப்புச் சோதனை தலத்திலிருந்து மெது

வாக நழுவி, பரீட்சார்த்த சுரங்க (பைலட் குவாரி) பிரதேசத்தை நோக்கிச் சென்றோம். சற்றுத் தூரத்தில் பெரிய மலையொன்று தென்பட்டது. தென் ஆற்காடு மாவட்டத்தில் மலை ஏது என்று மலைத்தோம். ஆனால் அதில் கற்களோ மரங்களோ காணவில்லை. மணல் மலையாயிருந்தது. அது மலையல்ல! பரீட்சார்த்தமாகச் சுரங்கத்தில் தோண்டி எடுக்கப்பட்ட மணல்தான் அப்படி மலையாகக் குவிக்கப்பட்டிருக்கிறது.

## பாதாள உலக பாதையில்

பரீட்சார்த்த சுரங்கம் 1600 அடி நீளமும் அதே அகலமும் 145 அடி ஆழமும் உள்ளது. மேலேயிருந்து இறங்கப் படிப்படியாக வளைந்து செல்லும் பாதையும், சில இடங்களில் படிகளும் உள்ளன; பாதைகளில் மட்டும் செல்லக்கூடிய அகலமுள்ளதால், பஸ்ஸில் வந்த நாங்கள் நடந்தே சென்றோம். கூழாங்கல் போன்ற கற் படிவமும், மஞ்சள், வெள்ளை களிமண்ணும் கலந்ததாயிருப்பதால் சரிந்து விழ ஏதுவில்லாமல் கற்குகை குடைந்த மாதிரி கெட்டியாயுள்ளது. படிகளில் இறங்கிச் செல்லும்போது பாதாள லோகம் என்று கதையில் சொல்கிறார்களே அதற்கு இதுதான் வழியோ என்று கலக்க மேற்பட்டது.

145 அடி இறங்கி விட்டோம். அதிலிருந்து கீழே 10 அடி குறுக்களவுள்ள கிணறு வெட்டப்பட்டுள்ளது. 176-வது அடியில் பழுப்பு நிலக்கரி தட்டுப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது. இது வரை 40 டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. நிலக்கரி வெட்டி மேலே எடுக்கப்பட்டுக் கொண்டு வருவதைப் பார்த்தோம். பாதாளலோகத்திலிருந்து மேலே வருவதற்குள் மூச்சு வாங்கியது. நெஞ்சு வறண்டது, தண்ணீர் தண்ணீர் என்று ஏககாலத்தில் குரல்கள், எங்குப் பார்த்தாலும் தண்ணீர் ஆனால் குடிக்கத் தண்ணீர் இல்லை என்ற ஆங்கிலக் கவிதை நினைவுக்கு வந்தது

'குவாரியிலிருந்து' தெர்மல் ஸ்டேஷனுக்குச் சென்றோம். 'மதராஸ் பேஸின் பிரிட்ஜ் மின்சார நிலையத்திலிருந்து ஒரு பகுதி அப்படியே நெய்வேலிக்கு எடுத்துச் சென்று 'பிரிதிஷ்டை' செய்யப் பட்டுள்ளது' இதில் உற்பத்தியாகும் 5000 'கிலோவாட்' மின்சாரத்தைக் கொண்டுதான் பம்புகள் தண்ணீரை இறைக்கின்றன'

தெர்மல் ஸ்டேஷனிலிருந்து பழுப்பு நிலக்கரி சம்பந்தமான பொருட் காட்சிச் சாலைக்குச் சென்றோம்' அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்குமாகக் கட்டப்பட்டுள்ள 250 வீடுகளிடையே, இக் காட்சிச் சாலை உள்ளது' பழுப்பு நிலக்கரிச் சோதனையை விளக்கும் புள்ளி விவரங்கள், மாடல்கள், படங்கள் உள்ளன.

பின்னர், அதையடுத்த ஆராய்ச்சியைப் பார்வையிட்டோம்' பழுப்பு நிலக்கரியின் தன்மை, மற்றும் வெள்ளைக் களிமண், மணல் முதலிய பொருள்களின் தன்மைபற்றி அங்கு ஆராயப்படுகிறது' பழுப்பு நிலக்கரியைத் தூளாக்கிக் கரி சத்தூட்டி, அமுக்கிப் 'பிரிக்கட்' களாகச் செய்துகாட்டப்பட்டது' சேலம் இரும்புக் கனியுடன், பழுப்பு நிலக்கரித் தாரைச் சேர்த்து, உருக்கி இரும்பு தயாரித்து 'மாதிரி வைக்கப்பட்டுள்ளது.

## புதைய லெடுக்கும் புனித முயற்சி

சாதாரண நிலக்கரியைவிடப் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு இரும்பை உருக்குவது மலிவு என்பது ஜெர்மனியின் அனுபவம்; அந்நாட்டிலும், நெய்வேலியைப் போல் நிலக்கரிக்கு அடியில் நீர் உள்ளது' அதை அவர்கள் சமாளித்து வெற்றி கண்டுள்ளனர். அங்கு உள்ளதைவிட இங்கே நீர் அதிகம் என்கிறார்கள். இருந்தாலும் அதைச் சமாளிக்க முடியாது என்று கூற முடியாது.

இயற்கையன்னையின் வயிற்றில் புதையுண்டு கிடக்கும் இந்தப் புதையலை, பொன்னையும் மணியையும்விட அதிகமாகப் போற்றக் கூடிய கரிச் செல்வத்தை வெளிக் கொணரப் பெரு முயற்சி நடைபெறுகிறது சிரமத்தைப் பாராட்டாமல் உழைக்கும் மனிதர்க்குப் பரிசளிப்பதற்காகவே இந்தப் புதையல் பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமிக்கடியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது' அதை வெளிக் கொணரும் பகீரத முயற்சி வெற்றி பெற வேண்டும்' பண்டித நேரு அடிக்கடி கூறுவதுபோல நெய்வேலி பெரியதோர் தொழில் உலக ஆலயமாகத் திகழ வேண்டும் என்பதே நமது விருப்பம்.

—சு. மி.

Telegrams: 'RAMBROS,

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

**COIMBATORE.**

ஊருக்கு ஏன் நம்மை இவர் இழுத்து வருகிறார் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால்அங்கேகோயிலின் வலப்புறத்து மண்டபத்தில் நவதாண்டவம் என்று குறிப்பிடப்படும் ஒன்பது கருங்கல் சிலா உருவங்கள் இருக்கின்றன. ஊர்த்துவ தாண்டவம், காலசம்ஹாரர், பிச்சாடனர், திரிபுராந்தகர் முதலிய ஒன்பதுசிவனுடைய மூர்த்தங்கள் உருவாகி இருக்கின்றன. எல்லா மூர்த்திகளின் அழகையும் அனுபவிப்பதோடு, ஏககாலத்தில் எல்லோரையும் ஓரிடத்திலேயே தரிசிக்கும் பாக்கியமும் கிடைத்துவிடுகிறதல்லவா?

இனி, அங்கிருந்து நேரே திருமருகல் வழியாக நாகபட்டினம் வந்து சேருங்கள். அங்குள்ளநீலாயதாட்சி அம்மன் கோயிலில் பஞ்சமுக விநாயகர் முதலிய செப்பு விக்கிரகங்களைப் பார்த்து விட்டு அந்த ஊரில் கோயில் கொண்டிருக்கும் சௌந்தரராஜப் பெருமாளையும் தரிசித்துவிட்டு, நாகபட்டினத்துக்கு மேற்கே நான்கு மைல் தூரத்தில் உள்ள சிக்கல் வந்து சேரலாம். சிக்கல் கோயிலைப் பார்த்தால் ஏதோ ஒரு பங்களாவிற்குள் நுழைகிற உணர்ச்சிதான் உண்டாகும். ஆம் அங்குள்ள மூர்த்தி சிங்கார வேலவர் அல்லவா? அவருக்கு ஒரு சிங்காரமான மாளிகையைத்தான் செட்டியார் ஒருவர் கட்டிக் கொடுத்திருக்கிறார். சிங்காரவேலவர் சிங்கார புருஷர்தான். ஆனால் அவருடைய தேவியர் இருவரும் அவ்வளவு சிங்காரமானவர்களாக இல்லை. காரணம் இரண்டு தேவிமாரும் பிந்திய காலத்தில் செய்யப்பட்டவர்கள் என்பதுதான்.

சிக்கலைக் கடந்து கீவளூர் என்னும் கீழ்வேளூரில் கால் மாறி ஆடிய நடராசரது திருவுருவைப் பார்த்துவிட்டு நேரே அதிவிரைவில் திருவாரூர் வந்து சேரலாம். திருவாரூர் தேரழகு என்பார்கள். ஆனால் அந்தத் தேரை இன்று மூடி வைத்திருப்பது காரணமாக அழகு ஒன்றையுமே காண முடியாது. ஆதலால் ஆடம்பரப்பிரியரான தியாகராசரைத் தரிசித்துவிட்டு அங்கு மனுநீதிச் சோழன் பேரவையிலே, கன்றிழந்த பசு கதறி அழுது நியாயம் கேட்கும் சிற்பஉருவையும் ஒரு மைந்தனை தன் குலத்துக்கு உள்ளான் என்று கூடக் கருதாது அவன் மீது ஏற்றினானே மன்னன் அந்தக் கல் தேரையும் பார்க்க மறவாமல் இருக்க வேண்டும்.

அதன் பின் நேரே திருத்தருப் பூண்டி வழியாக, தில்லைவளாகமே வந்து சேரவேண்டும். கொஞ்சம் உள்ளடங்கிய ஊர்தான். அந்த ஊரிலே பல வருடங்களுக்கு முன் பூமிக்குள்ளிருந்து எடுக்கப்பட்ட நடராசரும் ராமரும் தனித் தனிக் கோயில்களில் இருக்கிறார்கள். அபிடேக ஆராதனைகள் பிரமாதம் என்றாலும் அர்ச்சகர்கள் மூர்த்திகளின் முழு உருவத்தையும் தரிசிக்க விடமாட்டார்கள். நடராசரது கொவ்வைச் செவ்வாயன் குமிழ் சிரிப்பையும் அப்பொழுதலர்ந்த செந்தாமரையை ஒத்துள்ள அந்த ராமனது திரு முருகச் செவ்வியையும் மட்டும் கண்டு மகிழ்ந்து விட்டுத் திரும்பி விடவேண்டும்.

இனி, பட்டுக்கோட்டை அறந்தாங்கி எல்லாம் கடந்து மணிவாசகர் அருள் பெற்ற அந்தத் திருப்பெருந்துறை யென்னும் ஆவுடையார் கோயிலுக்கே அழைத்துச் செல்ல எனக்கு எவ்வளவோ ஆசைதான். என்றாலும் உங்கள் சவுகரியம் எப்படியோ? ஆதலால் ஆவுடையார் கோயிலைத் தற்காலிகமாக மறந்து நேரேமன்னார்குடிக்குவந்து அங்குள்ள இராசகோபால சுவாமியைச் சேவித்து விட்டு வடுவூர் வரலாம். வடுவூர் கோதண்டராமன் நீடாமங்கலம். சந்தான ராமன் எல்லாம் தமிழ் நாட்டில் இராமன் எப்படி எல்லாம் உருவாகியிருக்கிறான், என்பதற்குச் சான்று பகர்கிறார்கள். கவிச் சக்கரவர்த்தி கம்பன் இப்படி எத்தனை ராமர்களைக் கண்டுதரிசித்தானோ? அதனால்தானோஎன்னவோ அவனுடைய ராமனை அழகனாக, வீரனாக, தெய்வமாக எல்லாம் அவனுடைய காவியத்தில் உருவாகியிருக்கிறான்.

இத்தனை கலைக் கோயில்களையும்கண்டுதரிசித்தபின் தான் சாவகாசமாகத் தஞ்சைக்கு வந்து அங்கு ஒரு நாள் என்ன, பலநாள் தங்க வேண்டியதுதான். அங்குள்ளது பெருவுடையார் கோயில். அக் கோயிலில் உள்ள தட்சிண மேரு என்னும் விமானத்தைப் பற்றியெல்லாம் சொன்னால் கொல்லர் தெருவில் ஊசி விற்கும் கதைதான். தஞ்சையில் தங்குகிற போதுஅங்குள்ள சரசுவதி மகாலையும், சங்கீத மகாலையும் ஏன், கலைக்கூடத்தையும் அங்குள்ள சிலைஉருவங்களையும் காண ஒருநாள் ஒதுக்கி வைத்து விட வேண்டும். கலைக் கூடத்தைப் பற்றிய விவரம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் கலைக்கூடத்தில் இருக்கும் புத்தகத்தை வாங்கிப் படித்து விட வேண்டியதுதான். இனியும் கதை வளர்க்க விரும்பவில்லை. உங்களுடன் ஊர் சுற்றியதில் எனக்கு அலுப்பு ஏற்பட்டு விட்டது. ஆனால், அலுப்பு உடலுக்குத்தான்; உள்ளத்திற்கு அல்ல.

—தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

—த. நா.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு இயக்கங்களும் தலைவர்களும் உண்மைகளைப் புறக்கணிப்பதற்கில்லை; புறக்கணித்து நடந்தால் நாடு நலமுறாது.

மொழி நலம் என்பது, கல்விச் செல்வம்! பொருளாதார வளர்ச்சி என்பதற்காக மொழிநலம் முதலியவற்றை இழந்துவிடுதல் இயலாது; அதற்குப் பதில், மொழி நலம் முதலியவற்றிற்காகப் பொருளாதார வளர்ச்சிகளை இழக்க நேர்ந்தாலும் இழக்கலாம்.

அப்படியே, அருள் வளர்ச்சிக்குரிய நிலையங்களைக் கல்விக்காகவும் பொருளுக்காகவும் இழந்துவிடுதலும் இயலாது.

எதைஇழப்பது எதைக் காப்பது என்னும் தெளிவு இல்லாமல், இயக்கங்கள், நாட்டைக் கெடுத்து விடுதல் ஆகாது.

மொழி முதலிய கல்வி நலங்களை இழவாமல் பொருள் வளர்ச்சி அமைந்தால் நல்லதுதான்; அருள் நலத்தை இழக்காத வகையில் கல்வி பொருள் நிலைகள் அமைந்தால் நல்லதுதான்; அப்படி அமையவில்லை என்றால், அதற்காக உயர்ந்தவைகளை இழத்தல் நாகரிகச் செய்கையாகாது.

முன்னோர், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக விளைத்துக் கொடுத்த அருள்நிலைகளையும் மொழி முதலிய கல்வி நிலைகளையும் இழந்தபின், பொருளை மட்டும் வளர்த்து என் செய்வதாம்? விலங்குகள் போல உண்டு உறங்கிப் போரிட்டுக் கொண்டு உயிர்வளர்த்துக் கொண்டிருப்பதுதான் வாழ்க்கையா?

ஆதலால், அருளையும், முன்னோர் மொழி முதலிய கலையையும் எக் காரணங் கொண்டும் இழத்தலாகாதென்பதே சிறந்த முறை என்பது தெளியப்படும்.

---

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)